# விண்ணப்பதாரர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டியவை

1) The Chairman, TNUSRB, Chennai-2 என்ற முகவரி தவிர வேறு முகவரியோடு வங்கி வரைவோலை வாங்கி அனுப்பக் கூடாது.

2) வங்கி மேலாளரின் கையொப்பம் இல்லாமல் வரைவோலை அனுப்பக் கூடாது.

3) தேதி இல்லாத வங்கி வரைவோலை அனுப்பக் கூடாது.

4) அறிவிக்கை வெளியான தேதிக்கு முன்னர் வாங்கப்பட்ட வரைவோலையை அனுப்பக் கூடாது.

5) ரூ. 150/- க்கு குறைவாக வாங்கப்பட்ட வங்கி வரைவோலையை அனுப்பக் கூடாது.

6) வங்கி வரைவோலைக்குப் பதிலாக அஞ்சல் ஆணை, ரொக்கத் தொகை, காசோலை ஆகியவற்றை அனுப்பக் கூடாது.

7) விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இல்லாமல் வேறு படிவத்தில் அனுப்பக் கூடாது.

8) படிப்பு மற்றும் வயதை நிரூபிப்பதற்குரிய பள்ளி / கல்லூரி / மாற்றுச் சான்றிதழ் நகல் இல்லாமல் விண்ணப்பம் அனுப்பக் கூடாது.

9) பொதுப்பிரிவு தவிர மற்ற விண்ணப்பதாரர் தன் சாதி பற்றிய சான்றிதழ் நகல் அவசியம் அனுப்ப வேண்டும்.

10) புகைப்படம் ஒட்டப்படாத விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

11) விண்ணப்பதாரர் கையொப்பமிடாத விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

12) இராணுவத்தில் தற்போது பணியில் உள்ளவர்களை முன்னாள் இராணுவத்தினராகக் கருத முடியாது.

13) பதினெட்டு வயதை நிறைவு செய்யாதவர்கள் மற்றும் மிகையான வயது உடையவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வயதைத் தவிர வயது விதி விலக்கு எவருக்கும் அளிக்கப்படமாட்டாது.

தலைவருக்காக,
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்,
சென்னை - 600 002.